

மதுரை மற்றும் சிவகாசியில் அ.தி.மு.க சார்பில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மதுரை விமான நிலையம் வருகை தந்த அ.தி.மு.க இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமிக்கு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் ஆளுயர மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா. குமார், ஏ.பார்த்திபன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் திருத்தங்களில் திமுக ஆட்சியின் விலைவாசி உயர்வை கண்டித்து நடந்தா ஆர்ப்பாட்டத்திற்கு வந்த தமிழகம் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களை அருப்புக்கோட்டை நகரச் கழகச் செயலாளர் சக்திவேல் பாண்டியன் சால்வை கொடுத்து வரவேற்ற போது எடுத்த படம்.

# முதுகுளத்தூர் அருகே காசநோய் கண்டறியும் எக்ஸ்ரே முகாம்

**முதுகுளத்தூர், செப்.30**

முதுகுளத்தூர் அருகே காசநோய் கண்டறியும் நடமாடும் எக்ஸ்ரே முகாம் நடைபெற்றது.

தேசிய காசநோய் ஒழிப்புத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்ட காசநோய் துணை இயக்குனர் மருத்துவர் ஜீவானந்தம் அறிவுறுத்தலின் படி முதுகுளத்தூர் வட்டம் சாம்பக்குளம் கிராமத்தில் இரண்டு வாரதொடர்இருமல் -சளிபிரச்சணை- ஆஸ்மா மூச்சு விடுவதில் பிரச்சனை உள்ள நோயாளகளை கண்டறிந்து இல்லங்களுக்கு சென்று அறிவுரைகள் வழங்கி 40க்கும் மேற்பட்டவர்களுக்கு மார்பக எக்ஸ்ரே டிஜிட்டல் முறையில் எடுக்கப்பட்டது.காசநோய் குறித்து விழிப்புணர்வு மருந்துகள் குறித்து பரிந்துரை வழங்கபட்டது. முகாமில் மாவட்ட காசநோய் கல்வியாளர் மகேந்திரன் காசநோய் மேற்பார்வையாளர் மோகனபாலன்- ஆய்வக மேற்பார்வையாளர் விஜயலெட்சமி- எக்ஸ்ரே டெக்னிசன் சதீஸ்- பிளாசம் டிரஸ்ட் ஜான்சி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பரமக்குடி துர்க்கை அம்மன் கோயில் நவராத்திரி விழா

**பரமக்குடி, செப்.30-**

பரமக்குடி சின்னக்கடை பஜார் தெருவில் அமைந்துள்ள ஶ்ரீ துர்க்கை அம்மன் ஆலய நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது.நான்காம் நாள் திருவிழாவில் வண்ண மலர்களால் ஆன சிறப்பு அலங்காரத்தில் துர்க்கை அம்மன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.நவராத்திரி திருவிழாவை முன்னிட்டு பரமக்குடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.கோயில் வளாகத்தில் கொலு அமைக்கப்பட்டு பஜனைகள் நடைபெற்றன.ஏராளமான குழந்தைகள் கோவிலில் அமைக்கப்பட்டுள்ள கொலு பொம்மைகளை பார்த்து ரசித்தனர். விழாவில் துர்க்கை அம்மனுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடந்தன.விழாவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப் பட்டது.

## கையால் மலம் அள்ளும் விவகாரம்:

# குற்றச்சாட்டுகள் உறுதியானால் மாவட்ட கலெக்டர் சஸ்பெண்ட்

## ஐகோர்ட் மதுரை கிளை எச்சரிக்கை

**மதுரை, செப். 30-**

தொழிலாளர்கள் கையால் மலம் அள்ளுவது உறுதியானால் மாவட்ட கலெக்டர் பணியிடை நீக்கம் செய்யப்படுவர் என்று ஐகோர்ட் மதுரை கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அய்யா என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:- இந்தியாவில் துப்புரவாளர்கள் கையால் மலம் அள்ளும் நிலை தொடர்ந்து வருகிறது. பாதாள சாக்கடைகளில் இறங்கி துப்புரவு தொழிலாளர்கள் பணியாற்றும் சமயங்களில் விஷவாயு தாக்கி, அவர்கள் பரிதாபமாக இறக்கும் சம்பவங்கள் ஆங்காங்கே நடந்து கொண்டே இருக்கின்றன. துப்புரவு தொழிலாளர்கள் கையால் மலம் அள்ளுவதை தடுக்கும் வகையில் கடந்த 2013-ம் ஆண்டு மறுவாழ்வு சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டம் நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் கையால் மலம் அள்ளுவது முழுவதுமாக தடுக்கப்படவில்லை. இந்த சட்டத்தை கடுமையாக அமல்படுத்த வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு அரசுகளை அறிவுறுத்தி வருகிறது.

மனிதர்கள் மலம் அள்ளுவதை தடுக்க ரோபோ எந்திரங்களை பயன்படுத்தலாம். இதன் மூலம் பாதாள சாக்கடைகளில் விஷவாயு தாக்கி தொழிலாளர்கள் இறப்பது தடுக்கப்படும். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு அளித்தும் இதுவரை எந்த பதிலும் இல்லை. எனவே எனது மனுவின் அடிப்படையில் மனிதர்கள் மலம் அள்ளுவதை தடுக்க ரோபோ எந்திரங்களை பயன்படுத்தவும், துப்புரவு தொழிலாளர்கள் மறுவாழ்வு சட்டத்தை கடுமையாக அமல்படுத்தவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் மகாதேவன், சத்திய நாராயண பிரசாத் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் பாதாள சாக்கடைகளில் இறங்கி தொழிலாளர்கள் பணியாற்றுவது தொடர்பான புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த புகைப் படங்களை பார்த்ததும் அதிர்ச்சி அடைந்த நீதிபதிகள் இவை எங்கே எடுக்கப்பட்டவை என கேள்வி எழுப்பினர். அதற்கு மனுதாரர் வக்கீல், சென்னை, திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் எடுக்கப்பட்டவை என தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதிகள், மனுதாரர் சமர்ப்பித்த புகைப்படங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டர் பணியிடை நீக்கம் செய்யப்படுவார் என எச்சரித்தனர். மேலும் மனிதர்கள் மலம் அள்ளுவதை தடுக்க எடுத்த நடவடிக்கை குறித்து விரிவான அறிக்கையை அரசு தரப்பில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை 3 வாரத்துக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.



மதுரை கள்ளந்திரி ஊராட்சி ஒன்றிய பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழாவில் வேளாண் இடுபொருள்களை விவசாயிகளுக்கு அமைச்சர் பி. மூர்த்தி வழங்கினார். அருகில் மாவட்ட கலெக்டர் அனீஷ்சேகர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் சரவணன், மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா ஆகியோர் உள்ளனர்.

# குழந்தை திருமணம் தடுப்பு விழிப்புணர்வு

**ஒட்டன்சத்திரம், செப்.30**

திண்டுக்கல் மாவட்டம் ஒடடன்சத்திரம் நகர சட்ட விழிப்புணர்வு இயக்கம் சார்பாக குழந்தை திருமண தடுப்பு, மற்றும் பெண்குழந்தைகள் பாதுகாப்பு, குழந்தை திருமணம் இல்ல தமிழ் நாடு என்ற திட்டம் உருவாக்கபட்டு அதில் நாம் அனைவருக்கும் பங்குண்டு என்ற தொகுப்பு தொகுப்பு கையேட்டினை மாவட்ட சமூக பாதுகாப்பு நல அலுவலர் முன்னிலையில் துவக்கப்பட்டு திண்டுக்கல்நகர செயலாளர்பிரகாசமணி. ஒட்டன்சத்திரம் நகரச் செயலாளர் ராஜா ஆகியோர் தலைமையிலான குழுவினர் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்து வருகின்றனர்

3-வது நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்துகள்
இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம்
சென்னை
O.P. No. 2470 of 2022
V.கௌதமன் ...மனுதாரர்
எதிர்
1.M.ராமுதாய்
2.இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிட் ...எதிர்மனுதாரர்கள்
பெறுநர்
M.ராமுதாய், த/பெ.பாண்டியராஜ்
க/பெ.முருகேசன்,
க.எண்.223/2, காலேஜ் ரோடு,
அன்னான்ஜி போஸ்ட், வடபுதுப்பட்டி,
பெரியகுளம், தேனி-625531
இதன் மூலம், முதலாவது எதிர் மனுதாரராகிய M.ராமுதாய் ஆகிய தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில், மேற்படி மனுதாரர் தங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு மேற்படி நீதிமன்றத்தால் 16.11.2022 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தாங்கள் நேரிலோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமாகவோ 16.11.2022 அன்று காலை 10.00 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக தீர்வு காணப்படும் என்பதை அறியவும்.
ஆ.இரவீந்திரன்
சி.இராமச்சந்திரன்
மனுதாரர் வழக்கறிஞர்கள்

## காணவில்லை

நான் திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் உள்ள கன்னிக்காபுரம், ஜோதிராமலிங்கம் தெரு 10/17 என்ற முகவரியில் தொழில் நிமித்தமாக குடியிருந்து வருகின்றேன். எனது சொந்த ஊர் பார்த்திபனூர் ஆகும். எனது பெயரில் சென்னை, ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்த சொத்தின் பதிவு எண். 1/2097/2003 பதிவு நாள் 08.05.2003 ஆகும். நான் கிரையம் பெற்றிருந்த சொத்து பத்திரம் பார்த்திபனூரில் உள்ள மேற்படி முகவரியில் வைத்திருந்தேன்.எனது பெயரில் உள்ள சொத்தினை விற்பனை செய்வது தொடர்பாக நான் சென்னை செல்வதற்காக பரமக்குடி பேருந்து நிலையத்திற்கு கடந்த 18.08.2022ம் பார்த்திபனூரில் இருந்து எடுத்துக்கொண்டு பரமக்குடிக்கு வந்த போது பரமக்குடி பேருந்து நிலையத்தில் தொலைந்து விட்டது. மேற்படி ஆவணம் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தெரிவிக்கவும்.
M.அஸ்கர் அலிகான், த/பெ.முகம்மது உசேன்,
4/350 கமுதி மெயின்ரோடு, பார்த்திபனூர்-623608.
செல் : 98843 51215

## காணவில்லை

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கருங்காலக்குடி கிராமத்தை சேர்ந்த வெள்ளக்குட்டி மகன் வெ.ராஜேந்திரன் என்னுடைய மனையிட பத்திரம் ஆவண எண்: 1789/2012 ஆண்டு கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகும். பத்திரத்தை நகல்எடுக்க கருங்காலக்குடி வந்த போது பையுடன் காணவில்லை கண்டெடுத்தவர்கள் தகவல் தெரிவிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.
இப்படிக்கு
வெ. ராஜேந்திரன்
செல்: 7639832111

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.6068/2021/ஆ6
இ.ப.வ.எண்.340/2021
முத்துமுருகன்,
த/பெ. வெள்ளையகவுண்டர்,
பால்பண்ணை தெரு,
பள்ளபட்டி,
பள்ளபட்டி கிராமம்,
நிலக்கோட்டை தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம். ...... மனுதாரர்
//எதிர்//
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் மனுதாரர் தந்தை வெள்ளையகவுண்டர் என்பவர் கடந்த 20.02.1996 ம் தேதி 4/12,பால் பண்ணை தெரு, பள்ளபட்டி கிராமம், நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

## பொது அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, கள்ளெறும்பு கிராமம், சல்லையகவுண்டனூரில் வசிக்கும். லேட் தங்கராஜ் அவர்களின் மனைவி முத்துலட்சுமி அவர்கள் கொடுத்த தகவலின் பேரில், எமது கட்சிக்காரரின் பெயரில் வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 06.11.1988ம் தேதியில் 1296/1988ம் ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ள அசல் கிரையப்பத்திரத்தை, எமது கட்சிக்காரர், கடந்த 10.09.2022ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் வேடசந்தூர் பஸ்ஸாண்டில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுப்பதற்காக எடுத்து சென்றதில் மேற்படி அசல் கிரைய பத்திரம் தவறி கீழே விழுந்து காணாமல் போய்விட்டது. மேற்படி அசல் கிரையப்பத்திரத்தை தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. எனவே. மேற்படி கிரையபத்திரத்தை எடுத்தவர்கள் என்னிடமோ, அல்லது எனது கட்சிக்காரரிடமோ கொடுத்து உதவும் படி அறிவிக்கப்படுகிறது.
Tmt.K.Jeyanthi B.A..B.L..,
Advocate & Notary public
Mediator,
57-F. Salai Street,
Near Sri Nagammal Kovil,
Vedasandur Town,
Dindigul Dr-624 710.
Mobile No. 9942617751, 8637669420.

# திருமங்கலத்தில் 3 டன் பதுக்கல் ரேசன் அரிசி பறிமுதல்

**திருமங்கலம், செப்.30**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரிலுள்ள வீட்டில் பதுக்கி வைத்திருந்த 3150 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல் செய்து உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருமங்கலம் நகர் பகுதியில் சிலர் ரேஷன் அரிசியை குறைந்த விலைக்கு வாங்கி அதனை பட்டைதீட்டி அதிக விலைக்கு விற்பனை செய்வதாக வந்த தகவலின் பேரில் மதுரை உணவு கடத்தல் தடுப்பு போலீசார் நேற்று கடைவீதி பகுதியில் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது அங்குள்ள தெலுங்கர் தெருவில் முத்து என்பவரது மகன் விஸ்வநாதன் வீட்டில் ரேஷன் அரிசி பதுக்கி வைத்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.அதனடிப்படையில் போலீசார் மேற்கொண்ட ஆய்வில் 50 கிலோ எடை கொண்ட 63 மூடை ரேசன் அரிசி மொத்தமாக 3150 கிலோ பறிமுதல் செய்யப் பட்டது. இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த மதுரை உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் ரேசன் அரிசி பதுக்கலில் ஈடுபட்ட விஸ்வநாதனை தீவிரமாக தேடி வருகின்றனர்.

3-வது நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்துகள்
இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம்
சென்னை
O.P. No. 2471 of 2022
J. ராஜநிதி ...மனுதாரர்
எதிர்
1.M.ராமுதாய்
2.இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிட் ...எதிர்மனுதாரர்கள்
பெறுநர்
M.ராமுதாய், த/பெ.பாண்டியராஜ்
க/பெ.முருகேசன்,
க.எண்.223/2, காலேஜ் ரோடு,
அன்னான்ஜி போஸ்ட், வடபுதுப்பட்டி,
பெரியகுளம், தேனி-625531
இதன் மூலம், முதலாவது எதிர் மனுதாரராகிய M.ராமுதாய் ஆகிய தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில், மேற்படி மனுதாரர் தங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு மேற்படி நீதிமன்றத்தால் 16.11.2022 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தாங்கள் நேரிலோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமாகவோ 16.11.2022 அன்று காலை 10.00 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக தீர்வு காணப்படும் என்பதை அறியவும்.
ஆ.இரவீந்திரன்
சி.இராமச்சந்திரன்
மனுதாரர் வழக்கறிஞர்கள்

**Government of Tamil Nadu**
**Rural Development and Panchayat Raj Department**
**National Rurban Mission (NRuM) Phase-II,Madurai District**
Roc.No.5054/2021/T2

Panchayat Union Office Madurai West, Madurai

**Quotation Calling Notice**

For and an behalf of the Governor of Tamilnadu sealed Rate Quotation are Invited from Manufactures or sole Distribution by the Block Development Officer (V,P),Madurai west office located in Chockikulam Madurai ,625002 for the following items a per the teams and conditions and detailed specifications listed in the Rate Quotations Document

**Millet Bakery Unit @ Chettikulam and Samayanallur Panchayats**

| Sl. NO | QUOTATON No | Rate Quotation for the supply of following Machinery/ Implements for Millet Bakery Unit | No. required | Rate Per machine (In Rs,) | EMD (in.Rs) |
|---|---|---|---|---|---|
| 1 | 01/NRuM | Pulveriser | 1 | 95000 | 1900 |
| 2 | 02/NRuM | Bakery Oven | 1 | 75000 | 1500 |
| 3 | 03/NRuM | Planetary Mixing Machine | 1 | 49000 | 980 |
| 4 | 04/NRuM | Dough Kneader | 1 | 45000 | 900 |
| 5 | 05/NRuM | Bakers table (stainless steel) | 1 | 15000 | 300 |
| 6 | 06/NRuM | Bake wares-list enclosed | 1 | 20000 | 400 |
| 7 | 07/NRuM | Display Counter (3feet) | 1 | 60000 | 1200 |
| 8 | 08/NRuM | Stainles steel trayes(to accommodate oven and also for other purposes) | 4 | 10000 | 200 |
| | | Total | | 369000 | 7380 |

The other documents with detailed specification of the Materials to be supplied are available at the office of the Block Development Officer (V.P),Madurai West,Madurai-625002 From the date of notification on payment from 10.30 AM to 4.00 PM on all working days till the date mentioned below.The EMD should be paid vide Demand Draft in the name of Block Development Officer (V,P), Madurai west Payabled at Madurai.

| | |
|---|---|
| Last Date and Time for receipt of Quotation document | 11.10.2022 |
| Opening of Rate Quotation | 12.10.2022 |

The rate Quotation are not transferable.The Quotation will be opened in the presence of the respective tenderers who are present with due authorized letters on the date and time mentioned above at the office of the Block Development Officer (V,P),Madurai West,Madurai-625002

வெ,ஆ.எண்:304 செ.ம.தொ.அ
மதுரை. நாள்:29.9.2022

Block Development Officer (V.P),
Madurai West

மாண்புமிகு உட்கோட்ட நடுவர்
நீதிமன்றம் மற்றும் வருவாய்
கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.3633/2022/F1
ஜெயபால், த/பெ.சுப்பன்
2/289,மேலத்தெரு
கொம்பாடி கிராமம்
வலையங்குளம் உள்வட்டம்
திருப்பரங்குன்றம் வட்டம்
மதுரை மாவட்டம். ------ மனுதாரர்
— எதிர் —
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருமங்கலம். -------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாராகிய நான், எனது தாத்தா கஞ்சமுத்து, க/பெ.சுப்பன் நாயக்கர் என்பவர் கடந்த 08.07.1973-ம் தேதி திருப்பரங்குன்றம் வட்டம்,கொம்பாடி கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 10தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்
ஜெயபால்
கொம்பாடி.

# பண்ணை குட்டைகளை பதிவு செய்ய மீனவர்களுக்கு கலெக்டர் வேண்டுகோள்

**சிவகங்கை, செப். 30-**

சிவகங்கை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள பிரவலூர் அரசு மீன்விதை வளர்ப்பு பண்ணையில் தற்போது கையிருப்பில் 7 லட்சம் ரோகு விரலிகள், 0.80 லட்சம் கட்லா விரலிகள் மற்றும் 0.40 லட்சம் மிர்கால் விரலிகள் உள்ளன. சிவகங்கை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் பதிவு செய்த பயனாளிகளுக்கு ரோகு மற்றும் மிர்கால் 1,000 மீன் விரலிகள் ரூ.400-க்கும், கட்லா 1,000 மீன் விரலிகள் ரூ.500-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் மற்றும் அரசு சார்ந்த அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மேற்படி தொகையில் 20 சதவீதம் கூடுதலாகவும் தனியார் மற்றும் கண்மாய் குத்தகைதாரர்களுக்கு மேற்படி தொகையில் 50 சதவீதம் கூடுதலாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆகையால் மீன்வளர்ப்போர் மற்றும் மீனவர்கள் சிவகங்கை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் கீழ் உறுப்பினராக தங்களது பண்ணைக் குட்டைகளை பதிவு மேற்கொண்டு பயன் பெறலாம்.

மேலும், மீன்விரலிகளை வாங்கி பயன்பெற விரும்பும் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் பிரவலூர் அரசு மீன்விதை வளர்ப்பு பண்ணை, கீழப்பூங்குடி ரோடு, ஒக்கூர், சிவகங்கை – 630561 என்ற முகவரிக்கோ அல்லது 04575 – 240848 என்ற தொலைபேசி எண்ணிற்கோ தொடர்பு கொள்ளலாம் என கலெக்டர் மதுசூதன் ரெட்டி, தெரிவித்துள்ளார்.



அருப்புகோட்டை நாடார்கள் உறவின்முறை பொது அபிவிருத்தி டிரஸ்டுக்கு பாத்தியமான அமுதவல்லி அம்பாள் சமேத அமுதலிங்கேஸ்பரா திருக்கோவில் நவராத்திரி நான்காம் நாளை முன்னிட்டு அமுதவல்லி அம்பாள் சந்தான லட்சுமி சிறப்பு அலங்காரம் மற்றும் தீபராதனை நடைபெற்றது.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018.
Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.195/2021/ஆ6
இ.ப.வ.எண்.303/2020
பழனிச்சாமி,
த/பெ. லேட். திருமல் கவுண்டர்,
2/154, மேற்குத் தெரு,
குல்லி செட்டிபட்டி,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம். ...... மனுதாரர்
//எதிர்//
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் மனுதாரர் தாயார் செல்லம்மாள் என்பவர் கடந்த 03.02.2014 ம் தேதி ஷை முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

ந.க.எண்.2786/2022
வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம், சிவகங்கை
அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஆலங்குளம் பஞ்சாயத்து, கூத்தாண்டன் போஸ்ட், மகா சிவனேந்தல் கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் ராஜேந்திரன் என்பவரின் தந்தை கருப்பையா த/பெ. சப்பாணி என்பவர் கடந்த 07.04.2019ந் தேதியன்று ஷை சிவகங்கை வட்டம், பெரியகோட்டை, வடக்குத் தெரு என்ற முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
ராஜேந்திரன்
மனுதார்

மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம்
சிவகங்கை
O.S No.113/2021
1.மகமாகி
2.லெட்சுமணன்
3.சீதா
4.ரவிச்சநதிரன்
5.தமிழரசன்
6.பாலு
7.சாமிநாதன்
.................... வாதிகள்
-எதிர்-
முனீஸ்வரன்
.................... 2ம் பிரதிவாதி
மேற்படி நிர் வழக்கில் 2ம் பிரதிவாதிகயாகிய தாங்கள் ஆஜராவதற்கு வருகின்ற 26.10.2022ந் தேதி விசாரனைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00மணிக்கு ஷை நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதியாகிய தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
சி.கண்ணன் பி.பி.இ.எம்.எல்
அட்வகேட்/சிவகங்கை.

மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம்
சிவகங்கை
I.A.No.3/2021 In
O.S No.113/2021
1.மகமாகி
2.லெட்சுமணன்
3.சீதா
4.ரவிச்சநதிரன்
5.தமிழரசன்
6.பாலு
7.சாமிநாதன்
.. மனுதார்கள் / வாதிகள்
-எதிர்-
முனீஸ்வரன்
... 2ம் எதிர்மனுதார் / 2ம் பிரதிவாதி
மேற்படி நிர் வழக்கில் மனுதார்கள்/வாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்ய மனு செய்து அம்மனுவும் வருகின்ற 26.10.2022ந் தேதி விசாரனைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00மணிக்கு ஷை நீதிமன்றத்தில் 2ம் எதிர்மனுதார் / 2ம் பிரதிவாதியாகிய தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
சி.கண்ணன் பி.பி.இ.எம்.எல்
அட்வகேட்/சிவகங்கை.

சார்பு நீதிமன்றம்
சிவகங்கை
I.A.No3/2022 In
O.S No.347/2017
செல்வநாதன்(எ) செல்வராஜ் ..... மனுதார் / வாதி
-எதிர்-
உடையப்பன்
... புரபோஸ்ட் 6ம் எதிர்மனுதார் / 6ம் பிரதிவாதி
மேற்படி நிர் வழக்கில் புரபோஸ்ட் 6ம் எதிர்மனுதார்/6ம் பிரதிவாதியாக சேர்ப்பதற்கு மனு செய்து அம்மனுவும் வருகின்ற 23.11.2022ந் தேதி விசாரனைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00மணிக்கு ஷை நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
சிவ.விஸ்வநாதன்
பி.எஸ்ஸி.பி.எல்
அட்வகேட்/சிவகங்கை.



மதுரை கள்ளந்திரி ஊராட்சி ஒன்றிய பள்ளி வளாகத்தில் நடந்த மரக்கன்றுகள் நடும் விழாவில் பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக மஞ்சப்பைகளை பயன்படுத்த மாணவ, மாணவிகள், பொதுமக்களுக்கு அமைச்சர் மூர்த்தி வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அருகில் கலெக்டர் அனீஷ்சேகர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் சரவணன், மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா ஆகியோர் உள்ளனர்.



மதுரை அவ்வை பெண்கள் மேல்நிலை பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆகியோர் நேற்று வழங்கினர். அருகில் துணை மேயர் நாகராஜன், மண்டல தலைவர் பாண்டிசெல்வி ஆகியோர் உள்ளனர்.

# மின்னணு வாக்குப்பதிவு எந்திர கிடங்கு: ராமநாதபுரம் கலெக்டர் வர்கீஸ் ஆய்வு



**ராமநாதபுரம்,செப். 30-**

ராமநாதபுரத்தில் மின்னணு வாக்குப்பதிவு எந்திர கிடங்கினை கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள இந்திய தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கை கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, கலெக்டர், இந்திய தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு வளாகத்தில் உள்ள ராமநாதபுரம், முதுகுளத்தூர், திருவாடனை, பரமக்குடி (தனி) ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறையினை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடன் பாதுகாப்பு தன்மை குறித்து பார்வையிட்டனர். தொடர்ந்து கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் வேளாண்மை வணிக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்தநிகழ்ச்சியில் ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) மரகதநாதன், வட்டாட்சியர்கள் கார்த்திகேயன் (தேர்தல்), முருகேசன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகள் மற்றும் அடையாள அட்டை

## சிவகங்கை கலெக்டர் வழங்கினார்



**சிவகங்கை, செப். 30-**

சிவகங்கை மாவட்டம். இளையான்குடி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் இம்முகாமில் கலெக்டர் மதுசூதன் ரெட்டி, பங்கேற்று, மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன காதொலிக்கருவிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை ஆகியவைகளை வழங்கினார்.

இளையான்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேற்று மாற்றுத்திறனாளிகளுக்கான ஒற்றைச்சாளர முறையில் சிறப்பு குறைதீர் முகாம் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பங்கேற்று, மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்று, தகுதியுடைய மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, ரூ.30,000- மதிப்பில் காதுக்கு பின்னால் அணியும் நவீன காதொலிக்கருவியினை 6 மாற்றுத்திறனாளிகளுக்கும், 33 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டையும் வழங்கினார். இக்கூட்டத்தில் அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

முன்னதாக, இளையான்குடி வட்டத்திற்குட்பட்ட பகுதியில் தன்னார்வலர் அப்துல்மாலிக்கால் ஏற்பாடு செய்யப்பட்ட மரம் நடும் நிகழ்ச்சியில், கலெக்டர் கலந்து கொண்டு, பனை விதை மற்றும் மரக்கன்றுகள் நடும் பணியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் கு.சுகிதா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் து.கதிர்வேல், வட்டாட்சியர் அசோக்குமார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வெம்பக்கோட்டை அகழ்வாராய்ச்சியில் சுடும் மண்ணாலான ஆண்,பெண் மனித உருவ தலை கண்டுபிடிப்பு

**விருதுநகர் செப் 30.**



சாத்தூர் அருகே வெம்பக்கோட்டையில் உள்ள வைப்பாற்று கரையில் விஜயகரிசல்குளம் ஊராட்சிக்குட்பட்ட வடகரையில் அமைந்துள்ள உச்சி மேட்டில் 25 ஏக்கர் பரப்பளவிலான தொல்லியல் மேட்டில் கடந்த மார்ச் 16-ம் தேதி முதல் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த அகழாய்வில் முன்னதாக சுடு மண்ணால் ஆன பகடைக்காய், தக்களி, ஆட்டக்காய்கள், முத்துமணிகள், சங்கு வளையல்கள், பெண் உருவம், காளை உருவம், கோடாரி, சுடு மண்ணால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்கள், தங்க அணிகலன்கள், பொம்மமை உருவம் கண்டறியப்பட்டுள்ளது.



இதுவரை இந்த பகுதியில் 16 குழிகள் தோண்டபட்டுள்ள நிலையில் வியாழக்கிழமை சுடும் மண்ணால் ஆன ஆண், பெண் மனித உருவத்தின் தலை, பறவையின் உருவ தலை ஆகியவைகள் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த பகுதியில் வாழ்ந்தவர்கள் சுடுமண்ணால் ஆன அழகு பொம்மை பொருட்களையும் பயன்படுத்தியதாகவும் மேலும் நாளையுடன் இறுதிகட்ட இந்த அகழாய்வு முடியும் என்றும், இரண்டாம் கட்ட அகழாய்வு வரும் 2023 ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்படும் என்றும் தொல்லியல்துறை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**மரம் மனிதனின் உரம்**

# ஜாக் ரியானின் 3-ம் சீசன் பிரைம் வீடியோவில் டிச. 21-ல் வெளியீடு

**சென்னை, செப். 30-**

ஜாக் இஸ் பேக். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஜான் க்ராசின்ஸ்கி நடித்த டாம் க்ளான்சியின் ஜாக் ரியான் அதிரடித் தொடரின் மூன்றாவது சீசன் டிசம்பர் 21 புதன்கிழமை பிரைம் வீடியோவில் வெளியாகவுள்ளது. சர்வதேச அளவில் வெற்றி வாகை சூடிய எட்டு எபிசோடுகள் பிரைம் வீடியோவில் 240-க்கும் மேற்பட்ட நாடுகளிலும் பிராந்தியங்களிலும் பிரத்யேகமாக ஆங்கிலம், ஹிந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் ஸ்ட்ரீம் செய்யப்படவுள்ளது.

ஆக்ஷன்-த்ரில்லர் தொடரின் மூன்றாவது சீசன், ஜாக் ரியான் நேரத்துடன் போட்டியிட்டு விறுவிறுப்புடன் நகரும் காட்சிகளை கொண்டுள்ளது. ஜாக் ஒரு பெரிய சதித்திட்டத்தில் தவறுதலாக சிக்கி கொள்கிறார், பிரச்சனைகளில் இருந்து தப்பி மீண்டும் மாட்டி கொள்பவராக உணரும் நொடிகள் சுவாரசியமான நொடிகளாக படமாக்கப்பட்டுள்ளன. இதன் பிறகு, சி.ஐ.ஏ. மற்றும் அவர் கண்டுபிடித்த மோசமான சர்வதேச பிரிவினர் ஆகிய இருவராலும் தேடப்படுபவராகிறார், ஜாக் பாதாள வாழ்விற்கு தள்ளப்பட்டு, ஐரோப்பாவைக் கடந்து சென்று, உயிருடன் இருக்க முயற்சிக்கிறார், அதே நேரத்தில் ஒரு பெரிய உலகளாவிய மோதலையும் தடுக்கும் காட்சிகள் உங்களை ரசிக்க வைக்கும்.

டாம் க்ளான்சியின் ஜாக் ரியான் தொடர் அமேசான் ஸ்டுடியோஸ், பாரமவுண்ட் டெலிவிஷன் ஸ்டுடியோஸ் மற்றும் ஸ்கைடான்ஸ் டெலிவிஷன் ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர் மற்றும் ஆண்ட்ரூ பார்ம், அலிசன் சீகர், ஜான் க்ராசின்ஸ்கி, வான் வில்மாட், பிராட் புல்லர் மற்றும் மைக்கேல் பே ஆகியோர் நிர்வாக தயாரிப்பாளர்களாக செயலாற்றியுள்ளனர். மேலும், டாம் க்ளான்சி மற்றும் ஸ்கைடான்ஸ் டெலிவிஷனின் டேவிட் எலிசன், டானா கோல்ட்பர்க் மற்றும் பில் போஸ்ட் எக்ஸிகியூட்டிவ் ஆகியோர் மேஸ் நியூஃபெல்ட் மற்றும் கார்ல்டன் கியூஸுடன் இணைந்து மூன்றாவது சீசனை உருவாக்கியுள்ளனர்.

# கணினி அப்டேட் செய்ய விரும்புபவர்களுக்கு டபுள்யூ ப்ளூ எஸ்.என். 570 மாடல் பெஸ்ட் சாய்ஸ்

**கோவை, செப். 30-**

இன்றைய வேகமான டிஜிட்டல் யுகத்தில் கணினியின் செயல்திறனை மேம்படுத்தவும் அதிகரிக்கவும் தேவையான தொழில் நுட்பங்களையும், அம்சங்களையும் தேடுகிறோம். அப்படியானவர்களுக்கு, வெஸ்டர்ன் டிஜிட்டலின் டபுள்யூ ப்ளூ எஸ்.என். 570 மாடல் பெஸ்ட் சாய்ஸ் ஆக இருக்கும். ஏனெனில், கணினியை அப்டேட் செய்ய விரும்புவர்களுக்குத் தேவையான முழுமையான தீர்வுகளுடனும் அம்சங்களுடனும் சந்தையில் களமிறங்கியிருப்பது ஹைலைட்.

டபுள்யூ ப்ளூ எஸ்.என். 570 ஆனது மெலிதான எம்.2 2280 வடிவ காரணியில் கிடைக்கிறது, மேலும் நான்கு ஸ்டோரேஜ் கேப்பாசிட்டி அம்சங்களுடன் வருகிறது. அதன்படி, 250ஜி.பி., 500ஜி.பி., 1டி.பி. மற்றும் 2டி.பி. உள்ளிட்டவையாகும். இவை, 5 ஆண்டு உத்தரவாதத்துடன் வருது சிறப்புமிக்க ஒன்று. அமேசான் தளத்தில் 250ஜிபிக்கான விலை ரூ.2,720-ல் தொடங்கி, 2 டிபிக்கு ரூ. 20,999 வரை செல்கிறது. 1டி.பி. எடிஷனுக்கு 3500எம்.பி.பி.எஸ். ரீடிங் வேகம் மற்றும் பொதுவாகவே, 3000எம்.பி.பி.எஸ். ரீடிங் வேகம் வரை இருக்குமெனவும் நிறுவனம் உறுதியளிக்கிறது. இது பிராண்டின் சிறந்த சாட்டா எஸ்.எஸ்.டி. களை விட, உங்கள் கணினியை 5எக்ஸ் வேகமாக இயக்க உதவும் என்று கூறப்படுகிறது.

டபுள்யூ ப்ளூ எஸ்.என். 570 ஆனது 1டி.பி. யூனிட்டிற்கு 600டி.பி.டபுள்யூ என்ற தாங்குதிறன் மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. உங்கள் இயக்ககத்தின் ஆரோக்கியம், இடம், வெப்பநிலை மற்றும் பலவற்றைக் கண்காணிக்க உதவும் வெஸ்டர்ன் டிஜிட்டல் எஸ்.எஸ்.டி. டாஷ்போர்டையும் நீங்கள் பதிவிறக்கலாம். எங்கள் சோதனையின் போது, இது வெஸ்டர்ன் டிஜிட்டல் வாக்குறுதியளித்தது என்பதை நாங்கள் கண்டறிந்தோம். டபுள்யூ.டி டாஷ்போர்டு பயன்பாடு டிரைவில் இருக்கும் இடம், காலப்போக்கில் இயங்கும் வெப்பநிலை மற்றும் மீதமுள்ள வாழ்க்கை பற்றிய விரிவான புள்ளிவிவரங்களைக் காட்டுகிறது. அதோடு, நன்கு சிந்திக்கப்பட்ட மற்றும் அம்சம் நிறைந்த எஸ்.எஸ்.டி. மேலாண்மை அப்ளிகேஷனாகும்.

# சிவகாசியில் நடந்த அ.தி.மு.க. கண்டன பொதுக்கூட்டத்தில் நிர்வாகிகள் பங்கேற்பு

**சிவகாசி, செப். 30-**

விலைவாசி உயர்வு, சொத்து வரி, மின்கட்டண உயர்வு ஆகியவற்றை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் சிவகாசியில் நடந்த கண்டன பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில், திருத்தங்கல் மேற்கு பகுதி கழகச் செயலாளர் சரவணகுமார், கிழக்கு பகுதி கழக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, சிவகாசி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர். வெங்கடேஷ், சிவகாசி மேற்கு பகுதி கழகச் செயலாளர் கருப்பசாமி பாண்டியன், சிவகாசி கிழக்கு பகுதி கழகச் செயலாளர் சாம் என்ற ராஜா அபினேஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர் சித்துராஜபுரம் பாலாஜி, திருத்தங்கல் தொடக்க கூட்டுறவு வங்கி தலைவர் ரமணா, சிவகாசி மாமன்ற உறுப்பினர்கள் கரைமுருகன், சாந்தி சரவணகுமார், மாவட்ட கழக அவை தலைவர் விஜயகுமார், மாவட்ட கழக பொருளாளர் தேன்ராஜன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர். கிருஷ்ணராஜ், சிவகாசி கிழக்கு ஒன்றிய கழக பொருளாளர் கருப்பசாமிபாண்டியன், சிவகாசி கிழக்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர் மணிகண்டன், மாணவரணி அஜய் கிருஷ்ணா, விருதுநகர் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கண்ணன், தர்மலிங்கம், மச்சராசா, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றிய செயலாளர் மயில்சாமி, வத்திராயிருப்பு ஒன்றிய செயலாளர்கள் சுப்புராஜ், சேதுவர்மன், ராஜபாளையம் ஒன்றிய செயலாளர்கள் குருசாமி, நவரத்தினம், ராஜபாளையம் நகரக் கழக செயலாளர்கள் துரைமுருகேசன், பரமசிவம், விருதுநகர் நகர கழக செயலாளர் முகமது நயினார், மம்சாபுரம் பேரூர் கழக செயலாளர் ராஜேஷ்குமார், செட்டியார்பட்டி பேரூர் கழக செயலாளர் அங்கு துரைபாண்டியன், சேத்தூர் நகர கழகச் செயலாளர் பொன்ராஜ் பாண்டியன், வத்திராயிருப்பு பேரூர் கழகச் செயலாளர் வைகுண்டமூர்த்தி, எஸ்.கொடிக்குளம் பேரூரர் கழக செயலாளர் சங்கரமூர்த்தி, சுந்தரபாண்டியன் பேரூர் கழக செயலாளர் மாரிமுத்து, புதுப்பட்டி பேரூர் கழக செயலாளர் ஜெயகிரி, மாவட்ட ஊராட்சி தலைவர் வசந்திமான்ராஜ், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் கலாநிதி, அம்மா பேரவை இணைச் செயலாளர் சேதுராமானுஜம், திரைப்பட நடிகர் பிரபாத், அண்ணா தொழிற்சங்க மாநில இணைச்செயலாளர் சங்கரலிங்கம், மாவட்ட கழக துணைச் செயலாளர் அழகுராணி, தலைமைக் கழக பேச்சாளர் சின்னத்தம்பி, பொதுக்குழு உறுப்பினர் அருணா நாகசுப்பிரமணியன், மாவட்ட விவசாய பிரிவு செயலாளர் முத்தையா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் சேதுராமன், மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் முத்துராஜ், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் கே.கே.பாண்டியன், மாவட்ட மீனவர் அணி செயலாளர் காசிராஜன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் குறிஞ்சி முருகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் பாண்டியராஜன், தலைவர் செல்வம், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணை செயலாளர்கள் மாரிஷ்குமார், ஆனந்தகுமார், அண்ணா தொழிற்சங்க கவுரவத் தலைவர் குருசாமி, மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் திருமுருகன், திருத்தங்கல் முன்னாள் நகரக் கழக செயலாளர் முருகேசன், விருதுநகர் கிழக்கு மாவட்ட அவை தலைவர் ஜெயப்பெருமாள், கிழக்கு மாவட்ட இணை செயலாளர் ராஜேஸ்வரி வாசுதேவன், மாவட்ட துணை செயலாளர் இந்திரா கண்ணன், மாவட்ட பொருளாளர் குருசாமி, சாத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எதிர்கோட்டை எஸ்.சி.சுப்பிரமணியன், வெம்பக்கோட்டை ஒன்றிய குழு துணை தலைவர் ராமராஜ் பாண்டியன், கூட்டுறவு சங்க தலைவர் மணிகண்டன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மச்சேஸ்வரன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் கலைச்செல்வி, மாவட்ட மாணவரணி செயலாளர் வேங்கை மார்பன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் ராமநாதன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கருப்பசாமிபாண்டியன், காரியாபட்டி ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராமமூர்த்திராஜ், தோப்பூர் முருகன், நரிக்குடி ஒன்றிய கழக செயலாளர்கள் ரவிச்சந்திரன், பூமிநாதன், திருச்சுழி ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துராமலிங்கம், முனியாண்டி, அருப்புக்கோட்டை ஒன்றிய கழகச் செயலாளர்கள் வாசுதேவன், சங்கரலிங்கம், சாத்தூர் ஒன்றிய கழகச் செயலாளர்கள் தேவதுரை, சண்முகக்கனி, திருச்சுழி நகர கழக செயலாளர் தங்கவேல், வெம்பக்கோட்டை ஒன்றிய கழக செயலாளர் மணிகண்டன், ராஜபாளையம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் மாரியப்பன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் மகாமூர்த்தி, ஒன்றிய இளைஞரணி செயலாளர் ஆவியூர்குமார், அருப்புக்கோட்டை நகர கழக செயலாளர் சக்திவேல்பாண்டியன், சாத்தூர் நகர கழக செயலாளர் எம்.எஸ்.கே.இளங்கோவன், காரியாபட்டி பேரூர் கழக செயலாளர் விஜயன், மல்லாங்கிணறு பேரூர் கழக செயலாளர் அழகர்சாமி, கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், கடம்பூர் ராஜு, விஜயபாஸ்கர்,கோகில இந்திரா, வைகை செல்வன், முன்னாள் எம்.பி. ராதாகிருஷ்ணன் மற்றும் மாவட்ட மாநில நிர்வாகிகள் மற்றும் அருப்புக்கோட்டை நகர செயலாளர் சக்திவேல் பாண்டியன், நகர அ.தி.மு.க. நிர்வாகிகள் பம்பாய் வீர சுப்பிரமணி, செந்தமிழ்ச்செல்வன், கலசலிங்கம், அன்சாரி, மாரிமுத்து, கருப்புசாமி பாண்டியன், நாராயணசாமி, ஆறுமுகம், சடையப்பன், கணேசன், சேரன் என்ற இஸ்மாயில் மற்றும் விருதுநகர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை செயலாளர்கள் சிவா, கணேஷ்பாண்டியன், மாவட்ட மாணவரணி இணைச் செயலாளர் முத்துராஜ், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் கூடலிங்கபாண்டியன், சிவகாசி தெற்கு ஒன்றிய கழகப் பொருளாளர் தங்கமுனியாண்டி, திருத்தங்கல் மாணவரணி முத்துக்குமார் நன்றி கூறினர். கூட்ட ஏற்பாடுகளை விருதுநகர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# பரமக்குடியில் நெகிழிப் பைகள் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## நகராட்சி ஆணையாளர் எச்சரிக்கை

**பரமக்குடி செப். 30-**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வியாபாரிகள் நெகிழிப் பைகள் மற்றும் பிளாஸ்டிக் கப்புகள் விற்பனை செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் பரமக்குடி நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம் வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட நெகிழிகளை கண்டறியும் பொருட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுவருகிறது.



அந்த வகையில் பரமக்குடியில் உள்ள நிறுவனங்களில் ஆய்வு செய்ததில் இரண்டு நிறுவனங்களில் ஐந்து கிலோ நெகிழி கோப்பைகள் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.6000-/- அபராதம் விதிக்கப்பட்டது.வியாபாரிகளுக்கு பல முறை அறிவுரை கூறியும் மீண்டும் மீண்டும் வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.பிளாஸ்டிக் பைகளுக்கு தமிழக அரசு தடை விதித்துள்ளதை அனைத்து வியாபாரிகளும் கடைபிடிக்க வேண்டும்.

மேலும் வியாபாரிகள் இரண்டு தினங்களுக்குள் தங்கள் நிறுவனங்களில் உள்ள தடை செய்யப்பட்ட நெகிழிகளை நகராட்சியிடம் ஒப்படைப்பு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் அபராதம் மற்றும் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# தலைவர் நாகராஜ் தலைமையில் தென்கரை பேரூர் மன்ற கூட்டம்



**தேனி செப் 30**

தேனி மாவட்டம், தென்கரை பேரூர் மன்ற கூட்டம் தலைவர் நாகராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது. செயல் அலுவலர் மோகன்குமார், துணைத்தலைவர் ராதாராஜேஸ் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் குமரேசன், தேவராஜ், முருகாயிகாமராஜ், முத்துகாமாட்சி, மகேஸ்வரி, அழகுத்தாய், அனிதா பூசாரிகருப்பணன், சாந்தி, சிட்டம்மாள், கைலாசம், லட்சுமி, கோமதி ஆகிய வார்டு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் 3, 5, 9, 10, 11, 14 ஆகிய வார்டுகளில் 17 சிறு பாலங்கள் மற்றும் வடிகால் அமைத்தல், வார்டு 1 சத்யா நகரில் சமுதாய கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல், வார்டு 12 ஆர்.டி.யு காலனி மின்பவர் பம்ப் மற்றும் வார்டு 15ல் புதிதாக மினிபவர் பம்ப் அமைத்திடல் வார்டு 15ல் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் திருமண மண்டபம் கட்டுதல் உள்ளிட்ட 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

துணைத்தலைவர் ராதா ராஜேஸ் நன்றி கூறினார். இக்கூட்டத்தில் வார்டு உறுப்பினர்கள் தத்தம் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரவும், மேம்படுத்தவும் கோரிக்கை வைத்தனர்.

